திரு. ஆர். கிருஷ்ணசாமி நாயுடு : நாங்கள் ஒரு புல்டோசர் வேண்டுமென்று கேட்டு 4 மாதங்களுக்கு முன்னல் பணம் கட்டியிருந்தோம். இராமநாதபுரம் ஜில்லாவில் எத்தனை டோசர்கள் உபயோகத்திற்கு கொடுக்கப்பட்டிருக்கின்றன என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாஷா : இராமநாதபுரம் மாவட்டத்திற்கு என்று தனியாக புல்டோசர் இல்லை. மொத்தமாக 15 புல்டோசர்கள் இருக்கின்றன. தேவைப்படுகிற இடங்களில் அவைகளை உபயோகப்படுத்திக் கொள்ளலாம்.

திரு. எம். சங்கரலிங்கம் பிள்ளை : அமைச்சர் அவர்கள் தந்த தகவலின்படி எல்லா மாவட்டங்களிலும் தூர் வாருகிற திட்டம் இருக்கிறது என்று தெரிகிறது. ஆனல் கன்னியாகுமரி மாவட்டம் மட்டும் விடப்பட்டிருக்கிறது. அங்கே பல குளங்கள் வண்டல்களால் நிரப்பப்பட்டு தண்ணீர் தேங்காத நிலை இருப்பது அரசு கவனத்திற்கு வந்ததா ? அந்த மாவட்டத்திற்கு என்று தனியாக ஒரு திட்டம் அமைக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாஷா : கன்னியாகுமரி மாவட்டத்திலும் அப்படி ஒரு நிலைமை இருக்குமாளுல், நிச்சயமாக அரசு ஆழ்ந்து கவனித்து அதற்குத் தக்க நடவடிக்கை எடுத்துக் கொள்ளுவோம்.

Visual Education Shows

*100. *Q.*—THIRU M. RAJAH IYER : Will the Hon. the Minister for Local Administration be pleased to state :

(*a*) whether the educational institutions have to pay any tax under the Tamil Nadu Local Authorities Finance Act, 1961 for the Visual Education shows conducted by them free to their students ; and

(*b*) if so, the details thereof ?

கல்வி இலவசப் படக் காட்சிகள்

திரு. எம். ராஜா அய்யர் : மாண்புமிகு உள்ளாட்சி நிர்வாக அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) கல்வி நிலையங்கள் தங்கள் மாணவர்களுக்குக் கல்வி இலவசப் படக் காட்சிகள் காண்பிப்பதற்கென்று தமிழ் நாடு, 1961-ஆம் ஆண்டு உள்ளூர் ஆணைக் குழு நிதிச் சட்டத்தின் கீழ் வரி ஏதேனும் செலுத்த வேண்டுமா ?

(இ) ஆமெனில், அதன் விவரங்கள் யாவை ?

[9th September 1970

மாண்புமிகு திரு. எம். முத்துசாமி : (அ)வும் (இ) யும் : கல்வி நிலையங்கள் தாம் நடத்தும் திரைப்படக் கல்வி காட்சிகளுக்கு 1961-ஆம் ஆண்டு தமிழ் நாடு உள்ளாட்சி நிறுவனங்கள் நிதிச் சட்டத்தின் கீழ் கேளிக்கை வரியின் மீதான மேல் வரியை ஊராட்சி நிறுவனங்களுக்குத் தரவேண்டியதில்லை. அவைகள் சம்பந்தப்பட்ட உள்ளாட்சி நிறுவனம் காட்சி வரியின் மீதான மேல்வரியை அரசாங்கத்தின் முந்திய ஒப்புதலுடன் விலக்கு அளிக்காமல் இருந்தால் அதனைத் தர வேண்டியிருக்கும்.

திரு. எம். ராஜா அய்யர் : 16 எம்.எம். படங்கள்தான் பள்ளிக் கூடங்களில் காட்டப்படுகின்றன. அவைகளுக்கு ''ஷோ டாக்ஸ்'' கிடையாது என்று போட்டிருக்கிறார்கள். எப்போது ஷோ டாக்ஸ் கிடையாதோ அதன்மேல் சர்ச் சார்ஜும் இருக்க நியாயமில்லை. Show tax itself has been exempted.

இரண்டாவதாக, பள்ளிக்கூடங்களில் எந்தவிதமான வருமானமும் கிடையாது. கேட் கலெக்ஷன் கிடையாது. சில டி.சி.டி. ஓக்கள் பள்ளிக்கூடங்களுக்குச் சுற்றறிக்கை அனுப்பி நீங்கள் மாணவர்களிடமிருந்து விசேஷக் கட்டணங்கள் பெறுகிறீர்கள். அதை கேட் கலெக்ஷனாகப் பாவிக்கிறோம். எனவே அதற்கு 'டாக்ஸ்' கட்ட வேண்டும் என்று சொல்லுகிறார்கள். 16 எம்.எம். படங்களுக்கு மட்டும் எக்சம்ஷன் இருக்கிறது என்ற காரணம் தவிர, பள்ளிக்கூடங்களில் காட்டுகிற படங்கள் எல்லாம் கல்வி சம்பந்தமான படங்களே ஒழிய எந்தவிதமான கேளிக்கைப் படங்களுமல்ல. அவைகள் எண்டர்டெயின்மெண்ட் படங்களல்ல. எனவே கல்வி நிலையங்களில் காட்டுகிற படக் காட்சிகளுக்கு ஷோ டாக்சிலிருந்து, லோகல் டாக்சிலிருந்து விதி விலக்கு அளிக்க அரசாங்கம் முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். முத்துசாமி : இத்தகைய மேல் வரிக்கு உள்ளாட்சி மன்றங்கள் அரசினர் அனுமதியுடன் குறிப்பிட்ட வகையில் விலக்கு அளிக்கவில்லை என்றால், கல்வி நிலையங்கள் சட்ட பூர்வமாக அக்காட்சிகளுக்கு மேல் வரி செலுத்தியாக வேண்டும் என்பது இப்போதுள்ள விதி. அரசினரே நேரடியாக வரி விலக்கு அளிக்க உத்தரவிட அதிகாரமில்லை. சட்ட ரீதியான நிலையையொட்டி, வருமான வாரியம் ஒருமுகமான கொள்கை முறையை வசூலிப்பவர்கள் கடைப்பிடிக்கும் வகையில் தக்க நடவடிக்கை எடுத்துள்ளது. தற்போதுள்ள முறைப்படி, ஒவ்வொரு முறையும் வரி விலக்குக்காக உள்ளாட்சி நிறுவனங்களை அணுக வேண்டிய கட்டாயத்தை வலியுறுத்துவது சிக்கலாக இருப்பதாலும், சம்பந்தப்பட்டவர்கள் எளிதில் கையாள முடியாததாகவும் உள்ளதாலும், வருமான வாரியம் எளிதில் கையாளக்கூடிய ஒரு முறையை வகுக்குமாறு கேட்டுள்ளது. அதை அரசினர் பரிசீலித்துக் கொண்டிருக்கின்றனர். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட குறைகளை விதிகளிலிருந்து போக்கத் தக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.